பக்கங்கள் 18+ 02

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 09 ஞாயிற்றுக்கிழமை 26.10.2025 | அதிர்வு 87

## அமரகீர்த்தி எம்.பி. கொலை வழக்கு: ஜனவரியில் தீர்ப்பு



2022 ஆம் ஆண்டில் கோட்டாபய அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் உச்சத்தில் இருந்தபோது, நிட்டம்புவ நகரில் 02▸

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# வெலிகம தவிசாளர் படுகொலை: பெண் உட்பட மூவர் இன்று கைது!

### தப்பியோடிய துப்பாக்கிதாரியைத் தேடுகின்றது பொலிஸ்

வெலிகம பிரதேச சபை தவிசாளர் லசந்த விக்கிரமசேகர கொலை தொடர்பாக அனுராதபுரம் கெக்கிராவ பகுதியில் மூன்று சந்தேகநபர்கள் இன்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிதாரியின் மனைவி, துப்பாக்கிதாரியை அழைத்துச் சென்ற மோட்டார் சைக்கிளைச் செலுத்திய நபர் மற்றும் பதுங்குவதற்கு உதவிய நபர் ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

அனுராதபுரம் – கெக்கிராவ பகுதியில் பொலிஸாரால் இன்று அதிகாலை, பொலிஸ்மா அதிபரின் நேரடி மேற்பார்வையில், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தி 02▸



# ரணில் – சஜித் சங்கமம் அரசுக்குச் சவால் அல்ல!

### அமைச்சர் சமந்த தெரிவிப்பு

ரணில் - சஜித் ஒன்றிணைவானது தேசிய மக்கள் சக்தி அரசுக்கு எவ்விதத்திலும் சவாலாக அமையாது என்று அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.

“எதிர்க்கட்சிகளுக்கு சவால் என்பதாலேயே ஒன்றிணைந்து பயணிப்பது பற்றி பரிசீலிக்கின்றன. அது அந்தத் தரப்பு 02▸



# வடக்கில் மின் தடையால் மக்கள் பெரும் அவதி!



வடக்கு மாகாணத்தில் இன்று மின் தடையால் மக்களின் இயல்பு வாழ்க்கைக்குப் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது. அத்துடன், வர்த்தக நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தில் மன்னார் தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்டங்களில் இன்று ஞாயிற்றுக்கிழமை 13 மணித்தியாலங்கள் மின்சாரம் தடைப்பட்டுள்ளது.

வவுனியா, மன்னார் 220 கே.வி. மின் பரிமாற்ற வடத்தை மாற்றியமைப்பதற்கான வேலைகளுக்காகவே இன்று காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரை யாழ்ப்பாணம், 02▸

# அநுர அரசாங்கத்தின் ஆட்சியிலும் தமிழரின் உரிமைகள் மழுங்கடிப்பு

## சிறிதுங்க ஜயசூரிய கடும் விசனம்

"முன்னாள் ஜனாதிபதிகளான ரணில் மற்றும் ராஜபக்ஷக்களின் காலத்தைப் போன்று, தற்போதும் தமிழர்களின் உரிமைகள் சார்ந்த முக்கியத்துவம் மழுங்கடிக்கப்பட்டு வருகின்றது."

– இவ்வாறு ஐக்கிய சோஷலிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் உட்பட சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறிய தாவது:-

"இலங்கையில் தமிழர்கள் ஏராளமான பிரச்சினைகளுடன் வாழ்ந்து வருகின் றனர். ஆனால், அவர்களுக்கு அவ்வா றான பிரச்சினைகள் இல்லை என்பதைப் போன்றதொரு பிம்பம் கடந்த அரசுகளின்



காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. தற்போதும் அவ்வாறான நிலையே தொடர்கின்றது.

தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கிடை யிலான பிளவும் இதற்குப் பிரதான காரணமாக அமைகின்றது. பிளவுகள் இருந்தாலும், தீர்வுக்கான பொது வேலைத்திட்டத்தின் கீழ் தமிழ்க் கட்சிகள் ஒருமித்துச் செயற்பட வேண்டும்.

ஆளும் கட்சிக்கான மக்கள் ஆதரவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கூட்டுறவுத் தேர்தல்களில்கூட ஆளும் கட்சிக்குத் தோல்வி ஏற்பட்டு வருகின்றது. எனவே, மாகாண சபைத் தேர்தலை இழுத்தடிப் பதற்கே அதிகாரத் தரப்பு முற்படக்கூடும். அதற்கான ஆயுதமாக எல்லை நிர்ணய விடயம் பயன்படுத்தப்படலாம். எனினும், இந்தியா மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை என்பன தேர்தலை நடத்துமாறு வலியுறுத்துவதால், தேர்தல் நடத்தப்படவும் சாத்தியங்கள் உள்ளன."

– என்றார்.

---

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய 6 மாவட்டங்களில் மின் துண்டிக் கப்பட்டுள்ளது.

மின்சாரம் துண்டிப்பு குறித்து முன் கூட்டியேஅறிவிப்பு விடுக்கப்பட்டிருந்ததால் சில வியாபாரிகள் முன்னாயத்த ஏற்பாடு களை செய்திருந்தனர். எனினும், குளிர் சாதனத்தில் பொருட்களை வைத்திருந்து விற்பனை செய்யப்படும் பொருட்களை விற்கும் வியாபாரிகள் பாதிப்பை எதிர் கொண்டுள்ளனர்.

இன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் பெரும்பாலானவர்கள் வீட்டில் இருக் கின்றனர். நீண்ட நேர மின் தடையால் இன்னல்களுக்கு மத்தியிலேயே அவர்கள் பொழுதைக் கழிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

## வெலிகம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர், நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவ அதிகாரிகள் ஆகியோ ரின் கூட்டு விசாரணையின் ஒரு பகுதியாக இந்தக் கைது மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, பிரதான சந்தேகநபரான துப்பாக்கிதாரி அங்கிருந்து தப்பி யோடியுள்ள நிலையில், துப்பாக்கிதாரி யின் பிள்ளை பொலிஸாரால் பொறுப்பேற் கப்பட்டுள்ளது.

கைது நடவடிக்கையின்போது சந்தேக நபர்கள் பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்டதில் ஒரு பொலிஸ் அதிகாரி காயமடைந்துள்ளார்.

சந்தேகநபர்கள் கொலைக்குப் பயன் படுத்திய ஒரு மோட்டார் சைக்கிள், 12 இலட்சத்துக்கும் அதிக பெறுமதியுடைய ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருள் மற்றும் போதைப்பொருள் உபகரணங்கள் வைக்கப்பற்றப்பட் டுள்ளன.

இந்த மோதலின்போது, அங்கிருந்து தப்பியோடிய துப்பாக்கிதாரியைக் கைது செய்வதற்கான விசாரணைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளதுடன், தப்பியோடிய சந்தேகநபரின் அடையாளங்கள் அடங் கிய பொது அறிவிப்பையும் பொலி ஸார் வெளியிட்டுள்ளனர்.

இந்தநிலையில், தப்பியோடிய ஹக் மன பரணலியனகே நுவன் தாரக்க என்ற நபரைக் கைது செய்யப் பொலி ஸார் பொதுமக்களின் உதவியை நாடி யுள்ளனர்.

மேற்படி சந்தேகநபர் சுமார் 5 அடி, 6 அங்குல உயரம் கொண்டவர் எனவும், அவரது வலது மேல் கையில் ஆங்கி லத்தில் "அனுராதா" என்றும் இடது கையில் "ஹிதுமதே ஜீவீத்" என்றும் பச்சை குத்தியுள்ளதாகவும் அடையாளங் கள் வெளியிடப்பட்டுள்ளன.

இவரைப் பற்றிய தகவல் தெரிந்திருப் பின், 071 859 8888 (வட்ஸப்) அல்லது 011 233 7162, 071 859 2087 ஆகிய எண்களுக்கு அறிவிக்குமாறு பொலி ஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## அமரகீர்த்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து பொலனறுவை மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்து கோரல மற்றும் அவரது பாதுகாப்பு அதி காரி ஆகியோர் கொலை செய்யப்பட்ட வழக்கில், தீர்ப்பு அறிவிக்கப்படும் நாள் குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, இந்த இரட்டைக் கொலை வழக்கின் தீர்ப்பு 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் திகதி அன்று வெளியிடப்படும் என்று கம்பஹா மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய விசேட நீதிபதிகள் ஆயம் அறிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு மே மாதம், இலங்கை மிகப் பெரிய பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி இருந்த கால கட்டத்தில், ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ தலைமையிலான அரசுக்கு எதிராக நாடு முழுவதும் மக்கள் வீதியில் இறங்கி பாரிய ஆர்ப்பாட்டங்களை நடத்தி வந்தனர்.

இந்தநிலையில் 2022 மே 9 ஆம் திகதியன்று, ஆளும் கட்சி ஆதரவாளர்கள் கொழும்பில் உள்ள காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆர்ப்பாட்டக் காரர்களைத் தாக்கியதைத் தொடர்ந்து, நாடு முழுவதும் வன்முறை வெடித் தது.

இதன்போது நாடாளுமன்ற உறுப் பினர் அமரகீர்த்தி அத்துகோரல, தமது வாகனத்தில் கொழும்பில் இருந்து பொலனறுவைக்குச் சென்று கொண் டிருந்தபோது, நிட்டம்புவ நகரில் போராட் டக்காரர்களால் வழிமறிக்கப்பட்டார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட மோத லில், அவர் தமது பாதுகாப்பு அதிகாரி யுடன் கட்டடமொன்றுக்குள் தஞ்சம் புகுந்தார்.

பின்னர், அவரும் அவரது பாதுகாப்பு அதிகாரியும் அங்கு துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் சுயநல அரசியலின் வெளிப் பாடாகும்." – என்றும் அமைச்சர் கூறினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்த வேளை ரணில் – சஜித் தரப்புகள் ஒன்றிணையவில்லை. போர் நடந்த கால கட்டத்தில்கூட இணைந்து பயணிக்கவில்லை. அவர்கள் தற்போது இணைகின்றனர் எனில் அது அவர்களின் வங்குரோத்து அரசியலை வெளிப்படுத் துகின்றது." – என்றார்.





# ஐஸ் போதைப்பொருள் விற்ற மாமி, மருமகன் கம்பளை பொலிஸாரால் மடக்கிப் பிடிப்பு!

கம்பளை, உலப்பனைப் பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் மாமி மற்றும் மருமகன் ஆகியோர் கம்பளைப் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

67 வயது மாமியார் ஓய்வுபெற்ற ஆசிரியை எனத் தெரியவருகின்றது. இவர்களிடமிருந்து 200 கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி ஓய்வுபெற்ற ஆசிரியையின் மகன் கடந்த 24 ஆம் திகதி ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டிருந்தார்.

நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்நிலையில் கம்பளை, உலப்பனை பகுதியில் உள்ள வீட்டில் சோதனை செய்த போது மாமியார் , மருமகன் இருவரும் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டனர்.

போதைப்பொருள் விற்பனைக்குப் பயன்படுத்தப்பட்ட இருதொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர்கள் கம்பளை, நாவலப்பிட்டி, உலப்பனை போன்ற பகுதிகளில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டிருந்தனர் எனத் தெரியவருகின்றது.

இருவரையும் கம்பளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்குப் பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலதிக விசாரணைகளைக் கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிணறு வெட்டிய மணலுடன் சென்றவர் மீதே துப்பாக்கிச்சூடு

## சட்டவிரோத மணல் கடத்தலில்லை அந்தப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், கொடிகாமத்தில் கிணறு வெட்டிய மணலை வெள்ளம் தேங்கும் இடத்தில் கொட்டிக்கொண்டிருந்த இளைஞர் மீதே பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்று இளைஞரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

கொடிகாமம் பகுதியில் மணலுடன் பயணித்த உழவு இயந்திரத்தின் மீது பொலிஸார் நேற்றுமுன்தினம் துப்பாக்கிச் சூடு நடத்தியிருந்தனர். மணல் கடத்தலில் ஈடுபட்ட நபர் மீதே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது என்றும், பொலிஸாரால் இடைமறிக்கப்பட்ட போதிலும் நிற்காமல் சென்றதைத் தொடர்ந்தே துப்பாக்கிப் பிரயோகத்துக்கான தேவை ஏற்பட்டது எனவும் பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது. இவ்வாறான நிலையிலேயே பொலி



ஸாரின் குற்றச்சாட்டுக்களை துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளான இளைஞரின் உறவினர்கள் மறுத்துள்ளனர்.

அது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

“சம்பவம் இடம்பெற்ற பகுதியில் கிணறு ஒன்று வெட்டப்பட்டு வருகின்றது. எனவே, அங்கு குவிக்கப்படும் மணலை அருகில் உள்ள கடைக்கு முன்பாகக் கொட்டுவதற்கு ஏற்றிச் சென்றபோதே, பொலிஸார் இந்தத் துப்பாக்கிச்சூட்டை நடத்தியுள்ளனர். துப்பாக்கிச்சூடு நடத்த வேண்டிய தேவை உண்மையில் பொலிஸாருக்கு இருக்கவில்லை.

சட்டவிரோத மணல் கடத்தல் இடம்பெறுகின்றதா என்ற சந்தேகம் பொலிஸாருக்கு இருந்திருந்தால், அவர்கள் உழவு இயந்திரத்தை விரட்டிச் சென்று இடைமறித்திருக்கலாம். ஏனெனில் உழவு இயந்திரம் ஒன்றும் மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கும் வாகனம் அல்ல. எனவே, இந்த விடயத்தில் உரிய விசாரணை நடத்தப்பட்டு எமக்கு நீதி கிடைக்க வேண்டும்.” - என்றனர்.



# மன்னார் ஆஸ்பத்திரி இரத்த வங்கியின் குருதி தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை!

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் பேசாலை வெற்றி சிறகுகள் அமைப்பின் ஏற்பாட்டில்,பேசாலை பிரதேச வைத்தியசாலையில் நேற்று (25) சனிக்கிழமை காலை இரத்ததான முகாம் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் வேண்டுகோளுக்கு அமைவாகவும், மாவட்ட வைத்தியசாலை இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள குருதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையிலும் குறித்த இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது.

குறித்த இரத்ததான முகாமில் பேசாலைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் உள்ளடங்களாக சுமார் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தனர்.

குறிப்பாக பேசாலை பகுதியைச் சேர்ந்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினரும் இரத்த தானம் செய்தனர்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியின் உதவியுடன் வைத்தியர்கள் இணைந்து குறித்த இரத்ததான முகாம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.






# அளிகம்பை பிரதேச மக்களுக்கான சுகாதார சேவைக் கலந்துரையாடல்





ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அளிகம்பை பிரதேச மக்களுக்கான சுகாதார சேவை மற்றும் அப்பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள சுகாதார நிலையம் தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணி மனையில் இடம்பெற்றது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகிலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் ஆலையடிவேம்பு உதவிப் பிரதேச செயலாளர் எம்.ராமக்குட்டி, பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், ஆலையாடிவேம்பு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் பறூஸா நக்பர், அக்கரைப்பற்று பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஐ.ஏ.நசீர், அளிகம்பை அன்னையர் ஆதரவு கழகத்தின் செயலாளர் ஏ.வினோதினி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதன்போது அளிகம்பை பிரதேசத்தில் அமைந்துள்ள சுகாதார நிலையத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி அவ்வளாகத்தை சுத்தம் செய்தல். அப்பிரதேச மக்களின் நலன்கருதி வாரத்தில் மூன்று தினங்கள் குறித்த சுகாதார நிலையத்தில் கிளினிக் சேவையை வழங்குதல் எனத் தீர்மானிக்கப்பட்டது.






# கிழக்கு சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் திணைக்களங்களின் முன்னேற்ற ஆராய்வு!

(ஹஸ்பர் ஏ.எச்.)

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு உட்பட்ட திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் 2025 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டு திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பான மீளாய்வு கூட்டம் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர தலைமையில் திருகோணமலையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின் போது மாகாண சுகாதார அமைச்சு, சுகாதார சேவைகள் திணைக்களம், சிறைச்சாலை மற்றும் சிறுவர்கள் பாதுகாப்புத் துறை, ஆயுள் வேதத் துறை மற்றும் சமூக சேவைகள் துறை ஆகியவற்றின் திட்ட முன்னேற்றம் தொடர்பில் பரிசீலிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட திணைக்கள பணிப்பாளர்கள் மற்றும் அமைச்சின் செயலாளர், அதிகாரிகள் எனப் பலரும் குறித்த கூட்டத்தில் பங்கேற்றனர். திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போதே எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் இக்கூட்டத்தில் மேலும் கலந்துரையாடப்பட்டது.






# திருகோணமலை மாவட்ட செயலகத்தில் பிளாஸ்டிக், பொலித்தீன் இல்லா சூழல்!

## உருவாக்கும் முயற்சிகள் ஆரம்பித்து வைப்பு

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்ட அரச அதிபர் டபிள்யூ. ஜி. எம். ஹேமந்த குமாரவின் வழிகாட்டுதலுக்கு இணங்க மாவட்ட சமுர்த்தி முகாமையாளரும் நலன்புரி சங்க தலைவருமாகிய எச். சஞ்ஜீவ உட்பட நலன்புரி சங்க குழுவின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் (24) மாவட்ட செயலக வளாகத்தில் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் இல்லா சூழல் ஒன்றை உருவாக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் போது சேகரிக்கப்



பட்ட பிளாஸ்டிக் போத்தல்கள் மற்றும் பொலித்தீன் பொருள்கள் திருகோணமலை மீள்சுழற்சி மையத்திடம் ஒப்படைக்கப்பட்டன. இதன் மூலம், நலன்புரி சங்கத்தின் நிதிக்கு பணம் சம்பாதிக்க ஒரு வாய்ப்பும் உருவாக்கப்பட்டது.

நலன்புரிச் சங்கம் இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது. அதே நேரத்தில், டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்களைச் சுத்தம் செய்வதற்கான சிரமதான நடவடிக்கையும் இதன்போது மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். சுதாகரன், மாவட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.





நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஜெனிவா இழுபறி

மழை விட்டும் தூவானம் ஓயாதமை போல, ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அறுபதாவது அமர்வு இலங்கை தொடர்பான தீர்மானத்தை நிறைவேற்றிய பின்னரும் அதன் அதிர்வுகள் இலங்கையில் நீடிக்கவே செய்கின்றன.

இந்தத் தீர்மான விடயத்தில் கவுன்ஸிலில் வாக்கெடுப்புக்குக் கோராமல் இலங்கை பின்னடித்தமை தொடர்பில் கடும் ஆட்சேபங்களை வெளியிட்டுள்ள எதிர்க்கட்சிகள், அது தொடர்பில் நாடாளுமன்றில் விவாதம் நடத்த வேண்டும் என வலியுறுத்தி நிற்கின்றன.

முதலில் நவம்பர் நான்காம் திகதி இத்தகைய நாடாளுமன்ற விவாதத்தை நடத்தலாம் என்று அரசுத் தரப்பில் கூறப்பட்டாலும், இப்போது அது கால வரையறை இல்லாமல் பின் போடப்படும் என்று தெரிகிறது.

வத்திக்கானின் வெளிவிகார அமைச்சர் அன்றைய தினம் நாட்டில் முக்கிய விடயங்களில் பங்குபற்றுவதற்காக வருகை தருகின்றமையினால் தம்மால் அந்தத் திகதியில் நாடாளுமன்ற விவாதத்தில் கலந்து கொள்ள முடியாது என நாட்டின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இப்போது அறிவித்திருக்கிறார்.

நான்காம் திகதி தாண்டினால் ஐந்தாம் திகதி பௌர்ணமி விடுமுறை. அடுத்த ஏழாம் திகதி ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா நாட்டின் நிதி அமைச்சர் என்ற முறையில் தமது இரண்டாவது வரவு-செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கின்றார். அதன் பின்னர் தொடர்ந்து வரவு-செலவுத் திட்ட குழுநிலை விவாதம் தொடரும். அதனால் மேற்படி ஜெனிவா விவகாரம் தொடர்பான நாடாளுமன்ற விவாதம் மேலும் சில வாரங்கள் அல்லது மாதங்கள் தாண்டலாம் என்று நாடாளுமன்ற வட்டாரங்கள் கூறுகின்றன.

யுத்தத்தின் இறுதி கட்டத்தில் இடம்பெற்ற யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடுரங்கள், மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உள்நாட்டு பொறிமுறை மூலம் சுயாதீன விசாரணை நடத்துவோம் என்று இந்த அரசாங்கமும் தன் பங்குக்கு உறுதி அளித்து விட்டது. யுத்தம் முடிந்து 16 ஆண்டுகள் கடந்த பின்னரும் இதே கதை - வெறும் வாய்ச்சவாடலாகப் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இப்படி காலத்தை இழுத்தடிக்கும் சிங்கள பேரினவாதத்தின் போக்குக் கருதியே இந்த உள்நாட்டு பொறிமுறையை நம்புவதற்கு பாதிக்கப்பட்ட சமூகமாக தமிழர்கள் தயாராக இல்லை என்பதை அவர்களின் பிரதிநிதியாக கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் சாணக்கியன் வெளிப்படையாகக் கூறியிருக்கிறார்.

காலத்தை இழுத்தடித்து, இந்தக் குற்றச்சாட்டுகளை நீர்த்துப் போகச் செய்து மழுங்கடித்து விடலாம் என்று சிங்களம் கனவு காண்கின்றது. பேரினவாதத்தின் கொடூரங்கள் பற்றிய சாட்சிகள், பதிவுகள், ஆவணங்கள், ஆதாரங்கள், சான்றுகள் போன்றவை பல்லாயிரக் கணக்கில் - லட்சத்தைத் தாண்டி - ஐ.நா. பொறிமுறை மூலமே மிகப் பாதுகாப்பாகச் சேமித்துக் களஞ்சியப்படுத்தப் பட்டு வருகின்றன என்பதை சிங்களம் மறக்காமல் இருப்பது நல்லது.

# திருமலையில் முதலாவது மருத்துவ நிர்வாக கலாநிதி பட்டத்தைப் பெற்றுள்ளார் மருத்துவர் போல் ரொஷான்!

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலையை பிறப்பிடமாக கொண்ட மருத்துவர் ஞானகுணாளன் போல் ரொஷான், மாவட்டத்தின் முதலாவது மருத்துவ நிர்வாக கலாநிதி பட்டத்தை பெற்றுள்ளார். கொழும்பு பல்கலைக் கழகத்தின் மருத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தால் ஒக்ரோபர் மாதம் நடத்தப் பட்ட மருத்துவ நிர்வாக கலாநிதி பட்ட இரண்டாம் பிரிவு பரீட்சையில் சித்திய டைந்து இவ் முதன்மை நிலையை இவர் பெற்றுள்ளார்.

இதற்கு முன்னர் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த எவரும் இக்கலா நிதிப் பட்டத்தைப் பெற்றுக் கொள்ள வில்லை.இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மருத்துவ நிர்வாகிகளில் இத்தகுதியை உடையோர் மிகச் சிலரே என்பது குறிப் பிடத்தக்கது.



இவர் தனது வைத்தியத்துறைப் பய ணத்தை திருகோணமலை பொது வைத் தியசாலையில் பயிற்சி வைத்தியராக ஆரம்பித்தார்.இதன் பின் மொறவெவா ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்தின் பொறுப்பு வைத்திய அதிகாரியாக கடமை யாற்றினார்.காட்டு யானைகளின் தாக்கு தல்களினால் பின்தங்கிய நிலைமை யிலிருந்த மொறவெவா வைத்திய சாலையை தனது வழிகாட்டலின் கீழ் மாவட்டத்தின் சிறந்த ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் என்ற நிலைக்கு 2018இல் கொண்டு வந்தார்.

இதன் பின் வைத்திய நிர்வாக துறை யில் தன் பயிற்சியை ஆரம்பித்து, அக் கரைப்பற்று ஆதார வைத்தியசாலை மற்றும் கந்தளாய் ஆதார வைத்தியசாலை போன்றவற்றின் வைத்திய அத்தியட்ச கராக கடமையாற்றியுள்ளார்.

மருத்துவ நிர்வாக பட்டங்களுக்கு மேலதிகமாக சுகாதார மேலாண்மை, தரம் மற்றும் நோயாளர் பாதுகாப்பு, மற் றும் சுகாதார மேம்பாடு போன்ற துறைக ளில் தேசிய மற்றும் சர்வதேச பல் கலைக்கழகங்களில் பல உயர் பட்டங் களைப் பெற்றுள்ளார். திருகோணமலை இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்து கல்லூ ரியின் பழைய மாணவரான மருத்துவர் ரொஷானின் இச்சாதனையானது மருத் துவ நிர்வாக துறையில் பங்களிக்க விரும் பும் மருத்துவர்களும் மற்றும் மாண வர்களுக் கும்,குறிப்பாக தமிழ் பேசும் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஊக்கம் அளிப்பதாய் உள்ளது.




# மட்டக்களப்பு கலைஞர்களால் உருவாக்கப்பட்ட மூன்று திரைப்படங்கள் ஒரே நாளில் வெளியீடு!

(வாலகிருஸ்ணா)

மட்டக்களப்பு கலைஞர்களால் உரு வாக்கப்பட்ட மூன்று திரைப்படங்கள் ஒரே நாளில் ஒரே திரையரங்கில் வெளியீடு செய்யப்படவுள்ளன என்று திரைப்படத்தின் இயக்குனர்கள் தெரிவித்துள்ளனர்.

“அன்பின் மினுமினுப்பு”, “தங்கைக் கோர் கீதம்”, “யாதவின் அன்பின் பாதை” ஆகிய மூன்று திரைப்படங்கள் இவ்வாறு திரையிடப்படவுள்ளன.

மட்டக்களப்பு விஜயா திரையரங்கில் எதிர்வரும் 02 ஆம் திகதி மாலை 04 மணிக்கு இந்த திரைப்படங்கள் திரை யிடப்படவுள்ளன என்று திரைப்படங்களின் இயக்குனர்கள் தெரிவித்துள்ளனர்.

மூன்று திரைப்படங்களினதும் திரைப் பட இயக்கனர்களான ஜனிதன், கணேச லிங்கம் புஸ்பாகாந்த், ஜனா மோகேந்திரன் ஆகியோர் செயற்பட்டுள்ளனர்.

திரைப்படங்களின் இணைப்பாளராக கடமையாற்றிய வேட்டையன் இம்ரான் தலைமையில் குறித்த திரைப்படத்தில் கடமையாற்றியவர்கள் பங்குகொண்ட ஊடக சந்திப்பு மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்றது.

ஈழத்தில் உருவாகும் திரைப்படங்களுக் கும் கலைஞர்களுக்கும் ஊடகங்கள் வாய்ப்பளிக்க முன்வரவேண்டும் என்ற கோரிக்கையினை இதன்போது முன் வைத்தனர்.

சமூகத்தில் எதிர்நோக்கப்படும் பல் வேறு விடயங்களை வெளிப்படுத்தும் வகையில் இந்த திரைப்படங்கள் உரு வாக்கப்பட்டுள்ளன என்றும் இதன்மூலம் சமூகத்தில் மாற்றங்களை உருவாக்க முடியும் என்ற நோக்குடனும் வர்த்தக நோக்கம் அற்றமுறையில் இந்த திரைப் படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன எனவும் பட தயாரிப்பு குழுவினர் தெரிவித்தனர்.

சமூகத்தில் விசேட தேவையுடைய ஒருவர் எதிர்நோக்கும் சவால்கள் குறித்து யாதவின் அன்பின் பாதை திரைப்படமும் யுத்தகாலத்தில் கணவனை இழந்த பெண் தனது மகளுடன் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் போராட்டத்தை வெளிப் படுத்தும் வகையில் அன்பின் மினுமினுப்பு திரைப்படமும் அண்ணன் தங்கையின் பாசமும் வாழ்வியல் போராட்டங்களையும் கொண்டதாக இலங்கையின் தங்கைக் கோர் கீதம் திரைப்படமும் உருவாக் கப்பட்டுள்ளன. இவை முற்றுமுழுதாக விழிப்புணர்வுத் திரைப்படங்களாக உரு வாக்கப்பட்டுள்ளன என்று பட தயாரிப்பு குழுவினர் தெரிவித்தனர்.

ஈழத்தில் தமிழ் சினிமாவைப் பார்க்கும் நிலைமை உருவாகிவருகின்றது. நல்ல நல்ல கருத்துகளையும் கதைகளையும் வெளியிடும்போது மக்கள் அதனை ரசிக்கும் நிலைமை காணப்படுகின்றது. அதன் காரணமாக வர்த்தக சினிமாவை விட சமூகம் சார்ந்த சினிமாவை முன் கொண்டுசெல்லும் செயற்பாடுகளை தாங்கள் முன்னெடுத்துள்ளனர் என்று மூன்று திரைப்படங்களதும் இணைப் பாளராக செயற்படும் கலைஞர் வேட்டை யன் இம்ரான் தெரிவித்தார்.

ஈழத்தில் உருவாகும் சினிமாக்களுக் கான ஊடகங்களின் ஆதரவு என்பது மிக முக்கியமானதாகவுள்ள நிலையில் அனைத்து ஊடகங்களும் இதற்கான ஆதரவு தளத்தை வழங்கவேண்டும் எனவும் கேட்டுள்ளனர்.

# மருதமுனையின் மூத்த கல்விமான் இஸ்மாயில் மௌலானா பிரிந்தார்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியின் ஒய்வுபெற்ற அதிபரும் மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் முன்னாள் தலைவருமான செய்யித் இஸ்மாயில் மௌலானா காலமானார்.

அவரது ஜனாஸா நேற்று ஞாயிற்றுக்கிழமை மருதமுனை மையவாடியில் பெரும் திரளான மக்கள் பங்கேற்புடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவரது மறைவு குறித்து பழீல் மௌலானா பவுண்டேஷன் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது–

சிறந்த இஸ்லாமியப் பற்றாளரான இஸ்மாயில் மௌலானா, உயர்ந்த நாகரீகத்தின் உருவகமாகத் திகழ்ந்தார். கல்வி, ஒழுக்கம் மற்றும் சமூகப் பணிகளில் ஈடுபட்ட ஒரு மதிப்புக்குரிய ஆளுமையாக விளங்கினார். மரியாதைக்குரிய செய்யித் குடும்ப பாரம்பரியத்தைச் சார்ந்த இவர், 19ஆம் நூற்றாண்டில்



பக்தாத்திலிருந்து மருதமுனைக்கு குடிபெயர்ந்த அவரது முன்னோர்களின் வேர்களைப் பெருமையுடன் சுமந்தவர்.

மென்மையான சொற்கள், மன மொத்த நடத்தை, அனைவரிடத்திலும் அன்பும் மரியாதையும் கொண்ட அணுகுமுறை ஆகியவை அன்னாரது நாகரிகத்தின் அழகிய வெளிப்பாடுகளாகும். யுத்த காலத்தின் கடினமான நாள்களிலும் மருதமுனை மஸ்ஜிதுன் நூர் பள்ளிவாசலின் தலைவராக இருந்து சமூகத்திற்கு வழங்கிய தன்னலமற்ற தலைமைத்துவம் இன்று வரை நினைவில் நிற்கிறது. அவர் நடமாடும் வரலாற்றுப் பெட்டகமாக எம்மத்தியில் வாழ்ந்தவர். மருதமுனையின் வரலாற்று எழுதியதிலில் அவரது உள்ளீடுகள் தனியாக ஆவணப்படுத்தப்பட வேண்டியவை.

அவரது வாழ்க்கை ஒரு தலைமுறைக்கு முன்மாதிரி. அவரது இழப்பு மருதமுனை சமூகத்திற்கும் கல்வித் துறைக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். இவரது மறைவு பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ் உட்பட மற்றும் பல அரசியல் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் பொது அமைப்பினரும் அனுதாபச் செய்திகளை வெளியிட்டுள்ளனர்.



# அனர்த்தங்களுக்கான முன்னாயத்த நடவடிக்கை மேற்கொள்தல் தொடர்பான கலந்துரையாடல்

(நூருல் ஹுதா உமர்)

வடகீழ் பருவப் பெயர்ச்சி மழை மற்றும் அனர்த்தங்களுக்கான முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்தல் தொடர்பான கலந்துரையாடல் காரைதீவு பிரதேச செயலாளர் பொறியியலாளர் ஜீ. அருணன் அவர்களின் தலைமையில் காரைதீவு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச உதவிப் பிரதேச செயலாளர், கணக்காளர், உதவி திட்ட மிடல், பணிப்பாளர், சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர், நிர்வாக கிராம உத்தியோகத்தர், அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகின் பிரதிப் பணிப்பாளர், காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர், மற்றும் தொடர்புபட்ட ஏனைய திணைக்களங்களின் தலைவர்கள், பிரதிநிதிகள் மற்றும் காரைதீவு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உட்பட அனைத்து தரப்பினரும் கலந்து கொண்டனர். எதிர்கொள்ளவுள்ள வெள்ள அனர்த்தத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை எவ்வாறு குறைத்தல் மற்றும் ஒவ்வொரு திணைக்களங்களதும் பொறுப்புகள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.






# முல்லைத்தீவு மாவட்ட சித்த மருத்துவமனையை சுற்றுலா வாய்ப்புடன் மேம்படுத்த ஆலோசனை!

### ரவிகரன் எம்.பியின் கூற்றை வரவேற்ற அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு மாவட்ட சித்த மருத்துவமனையை சுற்றுலா வாய்ப்புகளுடன் மேம்படுத்துமாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், சுகாதார அமைச்சரிடம் ஆலோசனை ஒன்றை முன்வைத்தார்.

இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனதுது ஆலோசனையை வரவேற்ற சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, முல்லைத்தீவு மாவட்ட சித்த மருத்துவமனையை சுற்றுலா வாய்ப்புக்களுடன் மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்திலேயே இவ்விடயம் தொடர்பில் பேசப்பட்டுள்ளது. இதுகுறித்து நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கை தழுவிய வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள மாவட்ட சித்த மருத்துவமனை, மருத்துவ சுற்றுலா வாய்ப்புகளுக்கும் கட்டண அலகுடனான மருத்துவ சேவை வழங்கலுக்கும் மூலிகைத் தோட்ட நடைமுறைப்படுத்தலுக்கும் மிகவும் பொருத்தமான இடம்.

2026 இலிருந்தான ஒதுக்கீட்டில் சித்த மருத்துவம் சார்ந்து பொருத்தமான உள்கட்டமைப்பு விரிவாக்கங்களை தங்கள் அமைச்சு மேற்கொள்ளுமேயானால், வடமாகாணத்தில் சிறந்த சித்த மருத்துவ சேவை வழங்கும் நிலையமாக மேற்படி மாவட்ட சித்த மருத்துவமனையை மாற்றலாம்.

மூலிகைத்தோட்ட வசதிப்படுத்தலுக்கும், சுற்றுச்சூழல் உடனான சித்த மருத்துவ சேவை வழங்கலுக்கும் சுகாதார சேவை வழங்கல் ஊடான சுற்றுலா வாய்ப்புகளுக்கும் ஏற்ற ஓர் ஆதார வைத்தியசாலையாக உருப்பெறும் வாய்ப்பு மேற்படி மருத்துவமனைக்கு உள்ளது.

ஆண்கள், பெண்களுக்கான விசேட சிகிச்சை அலகு, மருந்தகம், மூலிகைத் தோட்டம், பாரம்பரிய உணவகம், கட்டண அலகுடனான சித்த மருத்துவ சேவை வழங்கல், ஆய்வகம் உள்ளிட்ட வசதிகளுக்கான போதுமான இடவசதியையும் மேற்படி மருத்துவ மனைச் சூழல் கொண்டுகாணப்படுகிறது.

எனவே மேற்படி முல்லைத்தீவு மாவட்ட சித்த மருத்துவமனையின் ஆளணி வள நிரப்பலுக்கு மேலாக உட்கட்டுமான விருத்தியிலும் கூடுதல் கரிசனையை கொள்ளுமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். – என்றார்.

இந்த நிலையில் இதற்கு அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பதிலளிக்கையில்,

முன்வைத்த கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளுக்கு மிக்கநன்றி. விசேடமாக சுற்றுலா வாய்ப்புக்களுடனும், கட்டண அலகுடனும் குறித்த முல்லைத்தீவு மாவட்ட சித்வைத்தியசாலையை மேம்படுத்துகின்றவகையில் நீங்கள் முன்வைத்த அபிப்பிராயங்களையும், கோரிக்கைகளையும் நாங்கள் கருத்திலெடுக்கின்றோம்.

இது தொடர்பில் உரியவகையில் கலந்துரையாடல்களை மேற்கொண்டு அந்த வைத்தியசாலையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். – என்றார்.

# நுண் நிதிக் கடன்களை மீளச்செலுத்த முடியாதவர் தொடர்பில் விவரம் திரட்டல்

(மஸ்கெலியா நிருபர்
செ.தி.பெருமாள்)

நுவரெலியா, மட்டக்களப்பு, பொலன்னறுவை மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் நான்கு பிரதேச செயலர் பிரிவுகளில் நுண் நிதிக் கடன்களை மீளச்செலுத்த முடியாதவர்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் நியமிக்கப்பட்ட உபகுழு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

நுண்நிதிக் கடன் வழங்கல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான எதிர்கால நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குறித்த உபகுழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சமன்மலீ குணசிங்ஹ தலைமையில் அண்மையில்கூடியபோதே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

நாடு முழுவதிலும் நுண் நிதிக் கடன்களால் பாதிக்கப்பட்டவர்களின் நிலுவைத் தொகை உள்ளிட்ட தகவல்களைத் திரட்டுவதற்கு முன்னோடியாக நுவரெலியா, மட்டக்களப்பு, பொலன்னறுவை மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் முறையே ஹட்டன், கோரளைப்பற்று தெற்கு, வெலிக்கந்தை மற்றும் வெள்ளவத்தை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் தரவுகளைச் சேகரிக்கத் திட்டமிட்டிருப்பதாக உபகுழுவின் தலைவர் தெரிவித்தார். இதற்கு அமைய தகவல்களைத் திரட்டுவதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அமைச்சின் அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தல் வழங்கினார்.

நுண் நிதிக் கடன்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பது அல்லது அவர்களை அந்தப் பிரச்சினையிலிருந்து மீட்டு எடுப்பதற்கான தலையீட்டை எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பில் இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இது தொடர்பில் மேலும் கலந்துரையாட நுண் நிதித் தொழில்துறையினர் சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களையும் அழைத்துக் கலந்துரையாடலை நடத்துவதற்கும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சி.எஸ் சத்துரி கங்கானி, (சட்டத்தரணி) துஷாரி ஜயசிங்க (சட்டத்தரணி) அனுஷ்கா திலகரத்ன, சுனில் ரத்னசிறி ஆகியோரும், அரசாங்க அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.





# முல்லை. பண்பாட்டுப் பெருவிழா மாந்தை கிழக்கில் நடைபெற்றது!

(பா.சதீசன் )

முல்லைத்தீவு மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று முன்தினம் (24) மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது.

பாரம்பரிய பண்பாட்டைப் பேணிடும் நோக்கிலும் எதிர்கால தலைமுறையினருக்கு கலை கலாசார மரபுகளை எடுத்துச் செல்லும் நோக்கிலும் குறித்த கலாசார விழா நிகழ்வுகள் ஒவ்வொரு பிரதேச செயலகத்திலலும் நடைபெற்றது. இறுதியாக மாவட்ட கலாசார விழா அனைத்துப் பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

விழாவுக்குப் பிரதம அதிதியாக வட மாகாண முன்னாள் பிரதம செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொண்டார்.

விழாவின் ஆரம்ப நிகழ்வில் கலை கலாசார பண்பாடுகளைத் தாங்கிய ஆற்றுகைகளுடன் விருந்தினர்கள் மாந்தை கிழக்கு நிகழ்வு மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.

தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. முது கலைஞர்களுக்கு "முல்லை கலைக்கோ" விருதுகளும் இளங்கலைர்களுக்க " இளஞ் சுடர்" விருதுகளும் வழங்கப்பட்டன.

மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர் செல்வி.ம.சர்மிலியின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற பண்பாட்டு விழாவில் வட மத்திய மாகாணத்தின் பிரதிப் பிரதம செயலாளர் எஸ். குணபாலன், மாவட்ட மேலதிக அரச அதிபர் (நிர்வாகம்) திருமதி.ச.மஞ்சுளாதேவி, மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.ஜெயக்காந் (காணி), மாவட்ட செயலக பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் சற்குணேஸ்வரன், புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய் முதலான பிரதேச செயலாளர்கள், பிராந்தி உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உதவிப் பிரதேச செயலாளர்கள், மாவட்ட நலன்புரி நன்மைகள் சபையின் இணைப்பாளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், மாந்தை கிழக்கு பிரதேச சபை தவிசாளர் மற்றும் செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர், ஏனைய உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.









# பல்கலைக்கழக 25 வருட சேவைக்காக பேராசிரியர் குணபாலன் கௌரவிப்பு!

**(வி.ரி.சகாதேவராஜா)**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 25 வருட அர்ப்பணிப்புமிக்க சேவையை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளதுடன் கல்வித்துறையில் அவர் ஆற்றிய அளப்பரிய பங்களிப்புக்காகப் பேராசிரியர் செல்வரெத்தினம் குணபாலன் பல்கலைக்கழக சமூகத்தால் கௌரவிக்கப்பட்டார்.

அவருக்கான கௌரவத்தை பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் எஸ்.எம்.ஜுனைடீன் வழங்கி வைத்தார்.

இவரது அர்ப்பணிப்பு, ஒருமைப்பாடு மற்றும் சிறப்பான பயணம் பலரை ஊக்குவிக்கிறது. அவர் இன்னும் பல ஆண்டுகள் வெற்றி, மகிழ்ச்சி மற்றும் கல்வி மற்றும் சமூகத்திற்கு அர்த்தமுள்ள சேவை செய்வார் என வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.





# கார்பன் வங்கி...!

## உயிர் கம்பளத்தை அழிக்காது இனிமேலாவது பாதுகாப்போம்!

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேசம் கடல், களம், ஆறு, நீர்நிலைகள் என இயற்கை வளமிக்க பகுதி. இங்கு பரந்த பரப்பில் பரவி நிற்கும் கண்டல் தாவரங்கள் (Mangroves), கடலோர சூழலியலின் பாதுகாப்புக் கோட்டையாக திகழ்கின்றன. கடலலை தாக்குதல்களிலிருந்து கரையோரத்தை பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், பல்வேறு மீன்கள், நண்டு, இறால், பறவைகள் போன்ற உயிரினங்களுக்கு வாழிடம் ஏற்படுத்தி சூழல் பல்வகைமையை பேணுகின்றன.

ஆனால், அண்மைக் காலங்களில் கிண்ணியா பிரதேசத்தில் கண்டல் தாவரங்கள் தீவிரமாக அழிக்கப்படுகின்றன. மீன்பிடி குளங்கள் அமைத்தல், நில அபகரிப்பு, வீடமைப்பு, எரிபொருள் சேகரிப்பு, பிளாஸ்டிக் மற்றும் கழிவு பொருள்களின் குவிப்பு ஆகியவை இந்த அழிவுக்குக் காரணமாகின்றன. இயற்கை வளம் என்ற அடிப்படையில் பார்க்காமல், தற்காலிக பொருளாதார நன்மைக்காக மக்கள் கண்டல் தாவரங்களை வெட்டுகின்றனர்.

திருகோணமலையின் கிண்ணியாவைச் சுற்றிப் பார்க்கும் ஒருவர் முதலில் கவனிப்பது கடல், ஆறு, களம் கலந்த அழகான இயற்கை. அந்த அழகை உயிர்ப்புடன் காத்து நிற்கும் பச்சை காவலர்கள் தான் கண்டல் தாவரங்கள். “மூக்கை நெரித்தாலும் சுவாசிக்க விடும்” என்று சொல்லும் பழமொழியைப் போல, புயலும், பெருவெள்ளமும் வந்தாலும், கண்டல் காடு மக்கள் வாழும் கரையோரத்தை அன்பாக காப்பாற்றி வந்தது.

ஆனால், இன்று கிண்ணியாவின் அந்த பச்சை காவலர்கள் மெதுவாக மறைந்து கொண்டிருக்கிறார்கள். மீன்குளங்கள், வீடுகள், எரிபொருள் மர வெட்டுதல், பிளாஸ்டிக் குப்பைகள் இவை எல்லாம் சேர்ந்து கண்டல் தாவரங்களை “காதறத் தள்ளி” விட்டன.

அழிவின் விளைவுகள் சுவாரஸ்யமாகவும், சோகமாகவும் இருக்கின்றன – கடல் புயல் வந்தால், கரையை காப்பாற்ற யாரும் இல்லை. மீன்களுக்கு “மாதவி அறை” இல்லாததால், மீனவர்களுக்கு மீன் கிடைப்பது குறைந்து விட்டது. பறவைகள் “வீடு தேடி” வேறு ஊர் பறக்கின்றன. மக்கள் “பசுமை அரணை” இழந்து, ஆபத்து முன் நிற்கிறார்கள்.சிறுவர்கள் விளையாடும் இடமாய் இருந்த கண்டல், இன்று பல இடங்களில் குப்பைத் திடலாக மாறிவிட்டது. “பசுமை காவலர்கள்” தப்பித்து ஓடுவதுபோல் தோன்றுகிறது.



சூழலியல் பொக்கிஷம் – கண்டல் தாவரங்கள் கார்பனை சேமிக்கும் திறனில், சாதாரண நில மரங்களை விட 4 மடங்கு அதிகம் திறன் கொண்டவை. அதனால் இவை “காலநிலை மாற்ற போராளிகள்”.

மீனவர்களின் தோழன் – இறால், நண்டு, சிறிய மீன்கள் கண்டல் வேர்களுக்குள் தஞ்சமடைகின்றன. “இங்கே மீன் கிடைக்காவிட்டால் வேறு எங்கும் கிடைக்காது” என்பதுதான் மீனவர்களின் சொல்வழக்கு.

கிண்ணியாவின் கண்டல் காடு மறைந்து போகும் பச்சை அதிசயம் – கிண்ணியா, கடலும் ஆறும் சந்திக்கும் இயற்கையில் பச்சையாகச் செழித்து நிற்கும் கண்டல் தாவரங்கள் ஒரு சாதாரண மரக்கூட்டமல்ல. இது கிண்ணியாவின் “உயிர்காப்புக் கம்பளம்”. உலகமே வியக்கும் பசுமை அதிசயம் கண்டல் தாவரங்கள் உலகின் “சூப்பர் ஹீரோ தாவரங்கள்” என்று அழைக்கப்படுகின்றன. ஏன் தெரியுமா? ஒரு ஹெக்ரெயர் கண்டல் காடு, வருடத்துக்குச் சுமார் 375 கிலோ ஒட்சிசனை உற்பத்தி செய்கிறது. அவை கார்பன் டையாக்சைடை 4 மடங்கு அதிகம் உறிஞ்சுகின்றன. அதனால் காலநிலை மாற்றத்துக்கு எதிரான பெரிய போராளிகள். அவற்றின் வேர்கள் இயற்கை சிக்கலான ஒரு “மீன் குழந்தைகள் பள்ளி”! சிறிய மீன்கள், இறால்கள், நண்டுகள் இங்கே வளர்ந்து கடலில் செல்கின்றன.

தொடர்ச்சி▼

# கார்பன் வங்கி...!

## உயிர் கம்பளத்தை அழிக்காது இனிமேலாவது பாதுகாப்போம்!

தொடர்ச்சி▲

ஆனால் கிண்ணியா, தம்பலகாமம் , ஆலங்கேணி போன்ற பிரதேசங்களில் இவ்வளவு பொக்கிஷம் இருக்கின்ற போதும் அவை, அழிக்கப்படுவது வியப்பல்லவா?

மீன்குளங்கள் அமைக்க, கண்டல் வெட்டப்படுகிறது. வீடமைப்புக்காக நிலம் அபகரிக்கப்படுகிறது. பிளாஸ்டிக் போத்தல்கள், பொலித்தீன் பைகள் வேர்களில் சிக்கி, மரங்கள் மூச்சுத் திணறுகின்றன. சில இடங்களில் காடு குப்பைத்திடலாகவே மாறிவிட்டது.

மக்கள் அனுபவிக்கும் விளைவுகள் – 2004 சுனாமி நினைவிருக்கிறதா? கண்டல் காடு இருந்த இடங்களில் பாதிப்பு குறைவாக இருந்தது. இன்று அது இல்லாமல் போனால் புயலின் முதல் அடிக்கு மக்கள் நேரடியாக ஆளாக வேண்டியிருக்கும். "முன்னர் வலையை கடலில் போட்டாலே மீன் குவியலா கிடைக்கும், இப்போ வெறுமையா வரும்" என்று மீனவர்கள் புலம்புகிறார்கள். பறவைகள் தினசரி நடத்தும் "வான விழா" மெதுவாக மங்கிவருகிறது. அறிவியல் புதுமைகளைக் கூட சுமந்திருக்கின்றது.

கண்டல் தாவரங்கள் "உப்பு வடிகட்டி இயந்திரம்": வேர்களின் முனைகளில் special membranes உள்ளதால், கடல் நீரில் இருந்தும் 90 வீதமான உப்பை விலக்கி உள் தண்ணீரை சேமிக்கின்றன.

Carbon Bank – ஒரு ஹெக்டேர் கண்டல் காடு, 730 டன் கார்பன்-டை-ஆக்சைடு சேமிக்கிறது. இது 350 கார்கள் ஓராண்டு உமிழும் புகைக்கு சமம்!

நோய்தடுப்பு மருந்துகள் – சில கண்டல் தாவரங்களில் anti-cancer, anti-viral தன்மை கண்டறியப்பட்டுள்ளது. இந்தியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகள் இதிலிருந்து புதிய மருந்து ஆய்வுகளை நடத்துகின்றன.

உயிரியல் அதிசயங்கள் – கண்டல் வேர்களில் சிறுமீன்கள், இறால்கள், நண்டு, களவாணிகள் தங்கள் குட்டிகளை வளர்க்கின்றன. அதனால் இதை விஞ்ஞானிகள் "நர்சரி ஆஃப் தி சீ" என்று அழைக்கிறார்கள்.

மைக்ரோபர்ட்ஸ் – மிகச் சிறிய பறவைகள் கண்டல் மரங்களில் மட்டும் முட்டை இடுகின்றன. சில அரிய இனங்கள் இலங்கையில் கிண்ணியா பகுதியில் மட்டுமே காணப்பட்டுள்ளன. இந்த தன்னிலையைக் கூட தக்க வைக்காது எம் சமூகம் அழிக்கின்றது என்பது கவலைக்குரிய விடயமாகவே உள்ளது.

இந்தக் கண்டல் தாவரங்களின் உலக அனுபவங்களைப் பார்த்தால், வியட்நாம் 1970களில் போர் காலத்தில் அழிந்த கண்டல் காடுகளை மீண்டும் நடவு செய்தனர். இன்று அதே பகுதி "Eco-Tourism Paradise" ஆக மாறி ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்பு உருவாக்கியுள்ளது.

பிலிப்பைன்ஸ் – பள்ளி மாணவர்கள் வருடாந்தம் "Mangrove Graduation Tree" நடவு செய்வது கட்டாயம். அதனால், அங்கு ஆயிரக்கணக்கான ஹெக்ரெயர் மீண்டும் பச்சை கண்டலால் மூடப்பட்டுள்ளது.

கென்யா – "Mangrove Carbon Credits" என்ற திட்டம். கிராம மக்கள் கண்டல் காடுகளை காப்பதால், சர்வதேச நிறுவனங்கள் அவர்களுக்கு கார்பன் வர்த்தகத்தின் மூலம் வருமானம் தருகின்றன.

பொருளாதார- சமூக சுவாரஸ்யங்கள் – கண்டல் காடுகள் மீனவர்களுக்கு ஆண்டுக்கு 33 பில்லியன் டொலர் மதிப்புள்ள உலகளாவிய கடல் உணவு வளத்தை வழங்குகின்றன என்று FAO அறிக்கை கூறுகிறது.

Mangrove u;oney – மிக அரிய ஆரோக்கிய உணவு. சந்தையில் கிலோவுக்கு 5,000 ரூபாவரை விலை



கிடைக்கும். கிண்ணியாவிலும் இதை மேம்படுத்தலாம்.

கண்டல் சுற்றுலா (Mangrove Tourism) இலங்கையில் இன்னும் முழுமையாக பயன்படுத்தப்படவில்லை. கிண்ணியாவில் "Mangrove Walkway", "Canoe Rides" போன்றவை இருந்தால், மீனவர்களின் குடும்பத்துக்கே புதிய வேலை வாய்ப்பு உருவாகும்.

இதுகுறித்து கிண்ணியாவின் கண்டல் தாவர சூழல் பாதுகாப்பு விடயத்துக்குப் பொறுப்பானவர் கூறுகையில், "மாதத்துக்கு 300 கன்றுகள் வழங்கி , அதற்கு நாற்று மேடை அமைத்து ஒவ்வொரு வகையான கண்டல்களையும் பிரித்தடுக்கி , அதற்கு உரிய சதுப்பு நிலங்களில் நடவைத்து அரசால் சம்பளம் வழங்கப்பட்டு, அதை பாதுகாப்பாளர்கள் வைத்து ஆடுகள், மாடுகள் என விலங்குகளிடம் இருந்து காப்பாற்றினால் அதனை மனிதன் அழித்து செல்கின்றான்."என்கிறார்

பல்கலைக்கழகங்களின் ஆளுமை சார்ந்த விடயங்கள் சூழல் சார்ந்த விடயங்கள் என செயல் திட்டங்கள் மூலமாக கண்டல் தாவரங்களை பல்கலைக்கழக மாணவர்கள் மீள் உருவாக்கம் செய்ய முயற்சி செய்தாலும் அது உருவாக்கப்படும் அளவிற்கு அழிக்கப்பட்டும் வருகின்றது என்பதை இவ்வாறான ஒரு செயற்றிட்டத்தை பல்கலைக்கழகத்தில் முன்னெடுக்கும் போது நானும் உணர்ந்து கொண்டேன்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தால் நடாத்தப்பட்ட ஆளுமை என்ற செயற்றிட்டத்தில் கண்டல் தாவரங்களை மீள் உருவாக்கம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் திட்ட முன்மொழிவு வழங்கப்பட்டு கண்டல் தாவரங்கள் அழிக்கப்படுகின்ற பிரதேசமான திருகோணமலையின் தம்பலகாமம் பிரதேசம் இனங்காணப்பட்டு பல நிறுவனங்களிடம் உதவிகள் பெறப்பட்டு நூறு கன்றுகள் நடப்பட்டன. நாற்று மேடைகள் அமைத்து அதனை பாதுகாக்க பாதுகாப்பாளர்களுக்கு சம்பளம் வழங்கும் பொறுப்பு ஏற்று மீள் உருவாக்க முயற்சி செய்யப்பட்டது. ஆனால் அங்கு அதுவோ அழிக்கப்படுகின்றது என்பது கவலைக்குரிய விடயமாகவே காணப்படுகின்றது.

எனவேதான் இவ்வாறாக பல உயிர்களை வாழ வாழ வைக்கும் சூழல் பல்வகைமையை பேணும் ஒரு உயிர் கம்பளத்தை அழிக்கின்றோம் என்ற தவறை உணர்ந்து, அதன் நன்மைகளை அறிந்து, இனி மேலாவது கண்டல் தாவரங்களை நட்டு, சூழல் பல்வகைமையை உருவாக்கி எம் வாழ்வையும் சீர்மைப் படுத்துவோம்.

**அப்துல் அஸீஸ் அஸ்மா,**
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.



# மின்னும் தங்கம் மங்கும் கனவு...!

இலங்கையில் தங்கத்தின் வரலாறு கி.மு. மூன்றாம் நூற்றாண்டுகள் பழமையானது. பழைய காலங்களில் தங்கமானது மதிப்பு, அதிகாரத்தின் அடையாளமாகக் கருதப்பட்டது. மன்னர்கள், உயர்ந்த சமூகத்தினர் தங்கள் பெருமையை வெளிப்படுத்த தங்க நகைகளையும், கிரீடங்களையும் அணிந்து வந்தார்கள் . நாட்டின் திறைசேரி முக்கியமான ஒன்றாகவே கருதப்பட்டு வந்தது அத்துடன், கோவில்களிலும் தங்கப் பொருட்கள் வழிபாட்டு பொருள்களாக பயன்படுத்தப்பட்டன.

சீன அரபு வர்த்தகர்களுடன் வர்த்தக பரிமாற்றத்தின் போதும் தங்கம், இரத்தினங்கள் போன்ற விலைமதிப்பற்ற பொருள்கள் பரிமாறப்பட்டன. அதன் அழகிய நிறம், அரிதான தன்மை, பௌதிக நிலைத்தன்மை ஆகியவை தங்கத்தை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனித குலத்தின் விருப்பமான உலோகமாக நிலைநிறுத்தியுள்ளன.

நகைகளாக,நாணயமாக, முதலீட்டு சாதனமாக தொழில்நுட்ப பயன்பாட்டிற்காக என பல்வேறு வடிவங்களில் தங்கம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. உலகப் பொருளாதாரத்தில் தங்கத்தின் இடம் என்பது வெறும் உலோகத்தைத் தாண்டி உலகளாவிய நிதி அமைப்பின் முக்கிய தூணாக விளங்குகிறது.

உலகளாவிய தங்க விலை என்பது ஒரே இரவில் தீர்மானிக்கப்படும் எளிய விடயம் அல்ல. லண்டன் புல்லியன் மார்க்கெட் அசோசியேஷன் மூலம் நடைபெறும் லண்டன் தங்க நிர்ணய விலை என்பது உலகளாவிய தங்க விலையின் முக்கிய தரநிலையாக விளங்குகிறது. ஒவ்வொரு வணிக நாளும் இரண்டு முறை காலை பத்து மணி முப்பது நிமிடங்களுக்கும், மாலை மூன்று மணிக்கும் லண்டன் நேரப்படி இந்த விலை நிர்ணயிக்கப்படுகிறது. உலகின் முக்கிய வங்கிகள் மற்றும் தங்க வர்த்தக நிறுவனங்கள் இணைந்து இந்த விலையைத் தீர்மானிக்கின்றன. அமெரிக்க டொலரில் ஒரு ட்ராய் அவுன்ஸ் தங்கத்துக்கான விலையாக இது வெளியிடப்படுகிறது.

ஆரம்பகாலத்தில் தங்கத்தின் விலையானது மிக குறைவானதாகவே உலகளாவிய ரீதியில் காணப்பட்டது. 1980களில் தங்கமானது இரண்டாயிரம் ரூபாயில் காணப்பட்டது. இதன் பின் பொருளாதார மாற்றம் மற்றும் தங்கத்தின் மீதான முதலீட்டுத் தேவை அதிகரித்ததால் வேகமாக தங்கத்தின் விலை அதிகரித்தது.

2020களில் மேலும் விரைவாக அதிகரித்தது அதன் பின் கொவிட்-19 காரணமாக உலகளாவிய பொருளாதார தேவையில் தங்கமானது தனது பெறுமதி அதி உச்சத்தைத் கண்டது. 2023 ஆம் ஆண்டு 200,000 ரூபாயை நெருங்கியது. 2024 தங்கமானது 230,000 - 260,000 வரை அதிகளவான உயர் வடைந்தது. ஆண்டின் இறுதியில் 270,000-300,000வரை சென்றது. 2025 ஜனவரியில் 280,000-310,000 ஆக இருந்தது. தற்போது ஐப்பசி மாத நிலவரத்தின்படி 22 கரட் தங்கமான 300,000-330,000 வரை உள்ள அதே வேளை 24 கரட் தங்கமானது 360,000 வரையில் காணப்படுகிறது.

தங்க விலை அதிகரிப்பு இலங்கையில் பல பாதகமான விடயங்கள் ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் திரு மணத்தில் தங்கமானது முக்கியமான இடத்தைப் பெறுகிறது.

தங்கவிலை உயர்வு காரணமாக நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களில் திருமண ஏற்பாடுகளில் இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளன. கடன் வாங்கி தங்கம் வாங்கும் அளவுக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.


அதாவது சீதனம் என்பது இலங்கையில் முக்கிய வகிபாகத்தைப் பெற்று வருகிறது. மணமகளுக்குத் தங்கத்தில் ஆபரணங்கள் அணிவித்து மகிழ்ச்சியாக மணமகன் வீட்டுக்கு அனுப்புவது படங்களாகவே காணப்படுகிறது. இவ்வாறிருக்க தங்க விலை அதிகரிப்பு இலங்கையைச் சுமைக்கும் தள்ளியுள்ளது . இதனால் கடன் வாங்கித் தங்கம் வாங்கும் நிலையில் மக்கள் உள்ளனர். இக்கடனைச் செலுத்துவதற்கு பல ஆண்டுகள் எடுக்கும் இவ்வாறானதொரு இக்கட்டான நிலையில் மக்கள் சிக்கியுள்ளனர்.


அதிகவிலையில் தங்கத்தை இறக்குமதி செய்வதால் அந்நியச் சொலாவணி கையிருப்பு குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனைவிட களவும் அதிகரித்துள்ளது. அதிகளவான களவு, கொள்ளை போன்றன தற்போது அதிகரித்து வருகின்றன. இதனால் சிறு நகைகளை அணிந்து கொண்டு வீதியில் செல்வதும் பயத்தை ஏற்படுத்தும் விடயமாகவே காணப்படுகிறது. வீடுகளுக்குள் நகைகளைப் பத்திரப்படுத்தி வைத்திருப்பதும் இலகுவான ஒன்றாக இல்லை.

இவ்வாறானதொரு நிலையில் எதிர்காலத்தில் தங்கவிலை எவ்வாறு இருக்கப்போகிறது என்பதும் கேள்விக்குறியான ஒன்றாகும். மதிப்பின் அடையாளமாகப் பார்க்கப்படும் தங்கமானது விலை உயர்வினால் எதிர் கால சந்ததியினரிடம் தேவையற்ற ஒன்றாக மாறிவிடும் தன்மையும் ஏற்படலாம்.

இதனால் இனி வரும் காலத்தில் தங்கத்தின் மீதான முதலீடானது அதிகரிக்கும். தங்க விலை குறையும் பட்சத்தில் பல இடர்பாடுகளும் குறைவடைந்து சுமூகமான நிலைக்கு நாடு திரும்பும்.

**நி.பானுஷா**
யாழ். பல்கலைக்கழகம் .






# ஏ ஐ தொழில்நுட்பமும் கல்விச்சமூகமும்...!

மனித வரலாற்றில் பல்வேறு காலகட்டங்களில் புதிய தொழில்நுட்பங்கள் உருவாகி சமுதாயத்தை மாற்றி அமைத்துக் கொண்டே செல்கின்றன. தொடர் பாடல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட அபரிதமான மாற்றமே இன்று மனித வாழ்க்கையை முற்றாக மாற்றிவிட்டது என கூறலாம் அதில் ஒன்றுதான் ஏஐ தொழில்நுட்பம். ஏஐ என்பது Artifical interllignce எனக் கூற முடிகிறது. இதனை தமிழில் செயற்கை நுண்ணறிவு என அழைக் கப்படுகிறது. மனிதர்களைப் போல சிந்திக்கவும், கற்றுக் கொள்ளவும், சிக்கல்களை தீர்க்கவும் உதவும் ஒரு துறையாக காணப்படுகிறது . இது கல்வி , மருத்துவம், வணிகம் போன்ற பல்வேறு துறைகளில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. முதல் AI அமைச்சராக அல் பேனியாவில் ஊழலுக்கு எதிராக பொது டெண்டர்களை மேற்பார்வையிட உலகின் முதல் ஏஐ அமைச்சர் நியமிக்கப்பட்டார் இந்த ஏஐ அமைச்சருக்கு டியல்லா (சூரியன்) என்று பெயரிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் கல்வி சமூகத்தில் ஏஐ தொழில் நுட்பத்தின் பயன்பாடு என்று நோக்குகின்ற போது இன்று கல்விக்காக ChatGPT, Gemini, perplexity, researchGate google translate goole. map noted போன்றன பயன்படுத்தப்படுகின்றன. இன்று பாடசாலை மாணவர்கள் முதல் பல்கலைக்கழகம் மற்றும் வெளி வாரியான பட்டதாரிகள் என அனைவரும் இதனை பயன்படுத்துகின்ற தன்மை காணப்படுகின்றது .

ஒவ்வொரு மாணவனுடைய தனிப்பட்ட கற்றல் தேர்ச்சியில் இன்று ஏஐ தொழில்நுட்பம் பாரிய செல்வாக்கு செலுத்துகின்றது. மாணவர்களின் திறன் ஆர்வக் குறைபாடு போன்றவற்றை அவர்கள் வழங்குகின்ற அறிவுறுத்தல்களுக்கு அமைவாக அறிந்து அதற்கு ஏற்ப விளக்கங்களை கொடுக்கின்ற போக்கு காணப் படுகிறது. உதாரணமாக Duolingo மொழிக்கற்றல் செயலியாகும். மாணவர்களின் நிலைக்கு ஏற்ப செயல் படுகின்ற தன்மை காணப்படுகிறது. உதாரணமாக கட் டுரை எழுதுவதற்கு, ஆய்வு வினாக்களை தயாரிப்பதற்கு, சுருக்கங்கள் எழுதுவதற்கு, கேள்விக்கான பதில்களை உடனுக்குடன் தெரிந்து கொள்வதற்கு என ChatGPT Gemini போன்றன பயன்படுத்தப்படுகின்றன.

கல்வித்துறையில் ஏஐ ஆனது பெருந்துறையாக மாறி வருகிறது அது கற்பித்தல், மதிப்பீடு, வகுப்பு மேலாண்மை, மாணவர் முன்னேற்றத்தை கண் காணித் தல் போன்றவற்றுக்காக ஆசிரியர்கள் அதிகம் பயன் படுத்துகின்றனர் மேலும் மாணவர்களின் கற் றலை மேம்படுத்துவதற்காக learning management systems பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக இதனை பல்கலைக் கழக கற்றலில் அவதானிக்க முடிகிறது பாடத் தலைப்புக்கு பொருத்தமான மேலதிக நூல்கள், மேலதிக இணைப் புகள், நிகழ்நிலை மூலம் கற்பிக்கப்படும் பாடப் பதிவுக ளினை இதில் தரவேற்றம் செய்யப்பட்டு மாணவர்களின் அறிவு பரப்பை விரிவாக்க வழி செய்கின்றன.

புத்தாக்க செயல்பாடுகளுக்கு AI தொழில்நுட்பம் வழிகாட்டியாக அமைகின்றது. குறிப்பாக ஒரு தலைப் பினை குறிப்பிட்டு எனக்கு எப்படி தேவை என சொல்லு கின்ற போது அதற்கு ஏற்றவாறு குறிப்பெட்டை தருகிறது இதனைக் கொண்டு புத்தாக்கத்தை மேலும் வினைத் திறனுடன் செயல்படுத்த உதவுகிறது. இவ்வாறான சாதகத் தன்மை ஏஐ தொழில்நுட்பத்தில் காணப்பட்டாலும் சில பாதகத் தன்மையும் காணப்படுகிறது எனலாம்.

மனித சமூகம் தொழில்நுட்பங்களுக்கு அடிமையா கின்ற சமூகமாக மாறி வருகிறது எனலாம். இன்று மாணவர்களின் சோம்பேறித்தனங்களுக்கு வழிவகுக் கின்றது ஏஐ தொழில்நுட்பங்களை அதிகம் நம்புவதனால் சுயமாக யோசிக்கும் திறன் குறைவடைந்து கொண்டு செல்கிறது . உதாரணமாக ChatGPT, google translate போன்ற ஏஐ கருவிகளின் மூலம் தேர்வு கட்டு ரைகளை நேரடியாக நகலெடுத்து சமர்ப்பிக்கப்படுகின்ற போக்கு பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை விரிவடைந்து கிடக்கின்றது. இதன் மூலமே புலமை திருட்டு இடம் பெறுகிறது இவ்வாறான செயல் அவர்களின் சிந்தனைத் திறனையும் படைப்பாற்றலையும் பாதிக்கின்றது.

சமூகத் தொடர்பு குறைவடைகிறது குறிப்பாக யுஐ அடிப்படையிலான நிகழ்நிலைக் கற்றல் ஆசிரியர் மாணவர் நேரடி தொடர்பை குறைக்கிறது உதாரணமாக நிகழ்நிலை மூலம் தமக்கான கேள்விக்கான பதிலை தேடுவதால் ஆசிரியர்களுடன் விவாதம் கலந்துரையாடல் போன்றன குறைவடைகின்றன. மேலும் அவர்கள் தொலைபேசியில் அல்லது கணினியிலோ தொடர்ச்சியாக உரையாற்றுகின்ற போது குடும்ப உறவுகளிடையே விரிசல் ஏற்படுகின்றது.

தொழில்நுட்ப வசதி உள்ள மாணவர்கள் யுஐ தொழில் நுட்பக் கருவிகளை பயன்படுத்துகின்ற நிலையும் பின் தங்கிய மாணவர்கள் இவ்வசதியின்றி பின் தள்ளப்ப டுகின்ற நிலையும் உருவாகின்றது. இது ஏழை பணக்கார பகுபாட்டை தோற்றுவிக்கிறது. குறிப்பாக நகர பாட சாலைகள் ஏஐஅடிப்படையிலான ஸ்மார்ட் கிளாஸ் ரூம் பயன்படுத்துகின்ற போது கிராமப்புற மாணவர் களுக்கு இந்த வாய்ப்பு கிடைக்காமல் போகின்ற தன்மை சமூகத்தில் புரையோடி கிடக்கின்றது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் கல்வி சமூகத்தில் மிகப்பெரிய மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளது இது மாணவர்களுக்கு தனிப்பட்ட கற்றல் அனுபவத்தை வழங்குவதோடு ஆசிரியர்களுக்கு பாடத்திட்டமிடல் மதிப்பீடு செய்வதற்கு தரவுகளை திரட்டு வதற்கு என்ற சாதக தன்மை காணப்பட்டாலும் ஏஐ யினை மிகையாக நம்புகின்ற போது சுய படைப்பாக திறன் வீழ்சியடைகின்றது. தனி உரிமை சிக்கல்கள் தொழில்நுட்ப வசதியுள்ள மாணவர்கள் மற்றும் வசதியற்ற மாணவர்களிடையே அறிவு சமநிலையின்மை போன்ற சவால்களும் காணப்படுகின்றன.

ஆகையால் கல்வி சமூகத்தில் பயனுள்ளதாக இருக்க வேண்டுமெனில் அவற்றைப் பொறுப்புடனும் நெறிமுறை களுடனும் மற்றும் சமநிலையுடனும் பயன்படுத்த வேண்டும். இதன் மூலமே ஏஐ தொழில்நுட்பமும் கல்வி சமூகமும் இணைந்து நிலையான முன்னேற்றத்தை நோக்கி செல்ல முடியும்.



**நா.உசாந்தினி,**
ஊடகக்கற்கைகள் துறை,
3 ஆம் வருடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.



# உடப்பு ஆண்டிமுனை முத்துமாரியம்மன் புனரமைப்புப் பணிக்கு அடிக்கல் நடல்!

**(உடப்பு க.மகாதேவன்)**

புத்தளம் மாவட்டத்தில் பல ஆண்டுகள் கடந்து வரலாற்றில் சிறப்புப்பெற்ற உடப்பு ஆண்டிமுனை தென்னத்தோட்டப் பகுதியில் குடிகொண்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் புனர் நிர்மானப் பணிகளுக்காக அடிக்கல் நடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் (24) இடம்பெற்றது. இந்த ஆலயம் கடந்த சில மாதங்களாக பாலஸ்தாபனம் செய்யப்பட்டிருந்தது. இந்து ஆலய பரிபாலன சபைத் தலைவர் வை.கந்தசாமியுடன் ,ஆலய நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டு அடிக்கல் நடும் நிகழ்வில் ஈடுபட்டனர்.

அத்துடன் சமயப் கிரியைகளை ஆலயக் குருவான "ஆகமசீலன்" சிவநேசக் குருக்கள் நடத்தி வைத்தார்.











# ராஜஸ்தான் மாநிலம் பன்ஸ்வாராவில் மிகப்பெரிய தங்கச் சுரங்கம் கண்டுபிடிப்பு

ராஜஸ்தான் மாநிலம் பன்ஸ்வாராவிலுள்ள கன்கரியா என்ற பகுதியில் மிகப்பெரிய தங்கச் சுரங்கமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த கண்டுபிடிப்பு இந்தியாவிற்கு ஒரு திருப்புமுனையாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள கன்கரியா சுரங்கத்தில் சுமார் 3KM நீளத்திற்கு, 110 மில்லியன் டன்களுக்கும் அதிகமான தாதுக்கள் இருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 222 டன் தூய தங்கம் அடங்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

ராஜஸ்தானில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட சுரங்கங்களில் இதுவே அதிக தங்க இருப்பு கொண்ட சுரங்கமாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

முன்னதாக பன்ஸ்வாரா மாவட்டத்திலுள்ள ஜக்புரா மற்றும் புகியா ஆகிய இடங்களில் தங்கச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பா.ம.கவின் செயல் தலைவராக மகளை அறிவித்தார் ராமதாஸ்




பாட்டாளி மக்கள் கட்சியின் செயல் தலைவராக தனது மகள் ஸ்ரீகாந்தியை ராமதாஸ் அறிவித்துள்ளார்.

பாட்டாளி மக்கள் கட்சியின் தருமபுரி மாவட்ட பொதுக்குழுக் கூட்டம் பென்னாகரம் சாலையில் உள்ள தனியார் மண்டபத்தில் நேற்று நடந்தது.

கட்சியின் கௌரவத் தலைவர் ஜி.கே. மணி எம்.எல்.ஏ தலைமை வகித்தார். இந்தக் கூட்டத்தில் ராமதாஸ் உரையாற்றுகையில்,

“கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்பு தருமபுரி மண்ணில் 4 பேருடன் தொடங்கப்பட்ட பா.மக. இன்று மாநிலம் முழுவதும் வளர்ந்து நிற்கிறது. இந்தக் கட்சியின் ஓய்வறியா உழைப்பாளியாக ஜி.கே. மணி பணியாற்றுகிறார். சட்டப் பேரவையில் மக்களுக்காகவும், தொகுதிக்காகவும் பேசுகிறார். அதனால் தான் அவரை 4 முறை நீங்கள் எம்.எல்.ஏவாக தேர்வு செய்தீர்கள். பா.ம.கவின் இளைஞரணி தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஜி.கே. எம்.தமிழ்க்குமரன், பொறுப்பு வழங்கப்பட்ட பிறகு தருமபுரி மாவட்டத்துக்கு முதல் முறையாக வந்துள்ளார். அவர் தருமபுரிக்கு மட்டுமல்ல தமிழகத்துக்கே பெருமை சேர்க்கும் வகையில் செயல்படுவார்.

பெருமைக்குரிய தருமபுரி மண்ணில் இருந்து புதிய அறிவிப்பு ஒன்றை வெளியிடுகிறேன். பா.ம.கவின் செயல் தலைவர் பதவி வெற்றிடமாக உள்ளது. அதை அவர் (அன்புமணி) ஏற்கவில்லை. எனவே, பா.ம.கவின் செயல் தலைவராக ஸ்ரீகாந்தி பரசுராமனை அறிவிக்கிறேன். ஸ்ரீகாந்தி, பா.ம.கவுக்கும் எனக்கும் பாதுகாப்பாக இருப்பார்.

தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தி அதற்கேற்ப அனைத்து சமூகங்களுக்கும் கல்வி, வேலைவாய்ப்புகளில் இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி மீண்டும் போராட்டம் நடத்தப்படும். 2026 சட்டப்பேரவை தேர்தலுக்கான பா.ம.கவின் கூட்டணியை நான்தான் அறிவிப்பேன். அது வெற்றிக் கூட்டணியாகவும் அமையும். வெகுவிரைவில் அதற்கான அறிவிப்பு வெளியாகும்.” என்று தெரிவித்தார்.

ஸ்ரீகாந்தி செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

“அய்யாவுக்கு மிகவும் பிடித்த மண்ணில் இருந்து எனக்கு பதவி கிடைத்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த பதவி கிடைக்கும் என நான் எதிர்பார்க்கவில்லை. திடீரென முடிவெடுத்து அவர் இதை அறிவித்துள்ளார். அவரது கட்டளையை ஏற்று கட்சியின் வளர்ச்சிக்காக சிறப்பாக செயல்படுவேன்.” என்றார்.



# நேருக்கு நேர் சந்திக்கின்றனர் கிம் ஜாங் - டொனால்ட் ட்ரம்ப்

வட கொரியத் தலைவர் கிம் ஜாங் உன்னை, தனது ஆசியப் பயணத்தின் போது சந்திக்க விரும்புவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

தான் கிம் ஜாங் உன்னுடன் சிறந்த உறவைக் கொண்டிருந்ததாக டொனால்ட் ட்ரம்ப் செய்தியாளர்களிடம் குறிப்பிட்டுள்ளார்.

ட்ரம்ப் தனது முதல் பதவிக்காலத்தில் இறுதியாக கிம் ஜாங் உன்னை சந்தித்துள்ளார்.

கடந்த 2019 ஆம் ஆண்டில் இந்த சந்திப்பு நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருவரும் ஒருவரையொருவர் சந்தித்துக் கைகுலுக்கிய படங்களும் உள்ளன.

இந்த சந்திப்பு வட கொரியாவில் நடைபெற்றதோடு அங்கு முதன் முறையாக சென்ற அமெரிக்க ஜனாதிபதி என்ற பெருமையும் ட்ரம்புக்கு உண்டு.

உலக அரங்கில் பெரும்பாலும் தனிமைப்படுத்தப்பட்ட ஒரு இரகசிய கொம்யூனிச சர்வாதிகார நாடான வட கொரியாவுக்கும், அணு ஆயுதங்களை உருவாக்கும் அதன் முயற்சிகளுக்கும் ட்ரம்ப் ஒரு வித்தியாசமான அணுகுமுறையை கையாண்டு வருகின்றார்.

ஆரம்பத்தில் கிம்மை "சிறிய ரொக்கெட் மனிதன்" என்று கேலி செய்தவரே இந்த ட்ரம்ப்.

வெள்ளை மாளிகை தகவல்களின்படி ட்ரம்ப் – கிம் ஜோடி இதற்கு முன்னர் 3 தடவைகள் சந்தித்ததாகக் கூறுகிறது.

எனினும், அணு ஆயுத மயமாக்கல் திட்டத்தில் இருவரும் உடன்படத் தவறிவிட்டதாக அறியமுடிகிறது.

அதன் பின்னர் வடகொரியா பல கண்டங்களுக்கு இடையேயான ஏவுகணைகளைச் சோதனை செய்துள்ளது என்று அதன் அண்டை நாடுகள் கூறி வருகின்றன.

இதேவேளை, வடகொரியாவை அணு ஆயுத நாடாக அங்கீகரிப்பீர்களா என செய்தியாளர்கள் ட்ரம்பிடம் கேட்டதற்கு, "அவர்கள் ஒருவித சக்தி என்று நான் நினைக்கிறேன், அவர்களிடம் நிறைய அணு ஆயுதங்கள் உள்ளன," என்று கூறினார்.

இதனிடையே, வடகொரியா தனது அணு ஆயுதங்களைக் கைவிட வேண்டும் என்ற "அபத்தமான" கோரிக்கையை அமெரிக்கா தொடர்வதை நிறுத்தினால், மீண்டும் ட்ரம்பை சந்திக்கத் தயாராக இருப்பதாக கிம் ஜாங் உன் கூறியுள்ளார்.

ஜனாதிபதி ட்ரம்பை எனக்கு இன்னும் நல்ல நினைவிருக்கிறது என்று கிம் ஜாங் உன் கடந்த மாதம் ஒரு உரையில் கூறியிருந்தார் என தெரிவிக்கப்படுகிறது.

# பாகிஸ்தானுக்குச் செல்லும் தண்ணீரைத் தடுக்க குனார் நதியில் புதிதாக அணை கட்டப்படும்

## ஆப்கானிஸ்தான் அரசு அறிவிப்பு

பாகிஸ்தானுக்கு செல்லும் தண்ண–ீரை தடுக்க குனார் நதியில் புதிய அணை கட்டப்படும் என ஆப்கானிஸ்தான் அரசு அறிவித்துள்ளது.

பாகிஸ்தானும், ஆப்கானிஸ்தானும் சுமார் 2,640 கிலோ மீற்றர் எல்லையைப் பகிர்ந்து கொண்டுள்ளன.

கட்டார் நாட்டின் சமரசத்தின் பேரில் கடந்த 19 ஆம் திகதி போர்நிறுத்தம் அமுல் செய்யப்பட்டது.

இருப்பினும் இரு நாடுகளின் எல்லைப் பகுதிகளில் தொடர்ந்து பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

இந்தநிலையில் 480 கிலோ மீற்றர் நீளம் கொண்ட குனார் நதியின் 70 சதவீத தண்ணீரை பாகிஸ்தான் பயன்படுத்தி வருகிறது.

இதனைத் தடுக்கவே குனார் நதியில் புதிய அணையைக் கட்ட ஆப்கானிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது.

இது குறித்து ஆப்கானிஸ்தான் நீர்வளத் துறை அமைச்சர் முல்லா அப்துல் லத்தீப் மன்சூர் சமூக வலைதளத்தில் பதிவொன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த பதிவில் "குனார் நதியில் புதிய அணை கட்டப்படும். இந்த நதியின் மீது ஆப்கானிஸ்தான் மக்களுக்கு முழு உரிமை இருக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து குனார் நதியில் கட்டப்படும் புதிய அணையின் மூலம் ஆப்கானிஸ்தானில் 1,50,000 ஏக்கர் நிலம் பாசன வசதியும், 45 மெகாவாட் மின்சாரமும் உற்பத்தி செய்யப்படவுள்ளதாக ஆப்கானிஸ்தான் நீர்வளம், எரிசக்தித் துறை செய்தித் தொடர்பாளர் மதியுல்லா அபித் தெரிவித்துள்ளார்.

மேலும் குனார் நதி தொடர்பாக ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் இடையே எந்த ஒப்பந்தமும் கையெழுத்தாகவில்லை. எனவே எவ்வித பிரச்சினையும் இன்றி நதியில் பிரம்மாண்ட அணையை கட்டுவோம் என்றும் பாகிஸ்தானுக்கு செல்லும் தண்ணீர் தடுத்து நிறுத்தப்படும் என்றும் மதியுல்லா அபித் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் இந்தியா, பாகிஸ்தான் இடையே ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலை காரணமாகச் சிந்து நதி ஒப்பந்தத்தை இந்தியா ரத்து செய்தது.

இதேபோல் குனார் நதியில் புதிய அணையை கட்டி பாகிஸ்தானுக்கு செல்லும் தண்ணீரை தடுக்க உள்ளதாக ஆப்கானிஸ்தான் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பக்கங்கள் - 02

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 26/10/2025

**ஆள்குறைப்புச் செய்யும் ஏயார் கனடா நிறுவனம்**



C2




# கனடாப் பொருள்கள் மீதான வரி மேலும் 10 சதவீதம் அதிகரிப்பு

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவிப்பு

கனடா மீதான வரிகளில் அவர்கள் தற்போது செலுத்துவதை விட கூடுதலாக 10 சதவீதம் அதிகரிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

கனேடிய மாகணம் ஒன்ராறியோ வெளியிட்டுள்ள விளம்பரத்தால் கடும் கோபமடைந்த ட்ரம்ப், கனடா உடனான வர்த்தகப் பேச்சுவார்த்தைகளை உடனடியாகக் கைவிடுவதாக அறிவித்த இரண்டு நாள்களுக்குப் பிறகு, 10 சதவீத கூடுதல் வரியை விதித்துள்ளார்.

ட்ரம்ப் தனது வுசரவா சமூக ஊடகத்தில் இந்த கூடுதல் வரி விதிப்பு தொடர்பில் உறுதி செய்துள்ளார்.

C2

# அமெரிக்கா தயாராக இருந்தால் வர்த்தகப் பேச்சு நடத்தத் தயார்

## கனடா பிரதமர் மார்க் கார்னி தெரிவிப்பு

அமெரிக்கா தயாராக இருந்தால் ஆக்கபூர்வமான வர்த்தக பேச்சு வார்த்தைக்குத் நடத்துவதற்கு தயாராக உள்ளதாக கனடா பிரதமர் மார்க் கார்னி கூறியுள்ளார்.

கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு அமெரிக்கா வரிகளை விதித்துள்ளது. அமெரிக்காவின் இந்த புதிய வரிகள், அதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து கனடா ஒரு தொலைக்காட்சி விளம்பரத்தை வெளியிட்டது.

அந்த விளம்பரத்தில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி றொனால்ட் ரீகன் வரி விதிப்புகள் வர்த்தக போர்களை உருவாக்கலாம் என்று உரையாற்றிய காட்சிகள் இடம்பெற்று இருந்தன.



இந்நிலையில் கனடாவுடனான அனைத்து வர்த்தக பேச்சுவார்த்தைகளும் உடனடியாக நிறுத்தப்படுவதாக ட்ரம்ப் அறிவித்தார். அமெரிக்காவுடன் வர்த்தகம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்தக் கனடா தயாராக இருப்பதாக கனடா பிரதமர் மார்க் கார்னி கூறியுள்ளார்.

ஆசிய உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக மலேசியா சென்றுள்ள மார்க் கார்னி கோலாலம்பூரில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் இதனைக் குறிப்பிட்டார்.

# ஆள்குறைப்புச் செய்யும் எயார் கனடா நிறுவனம்

எயார் கனடா நிறுவனம் தனது பணியாளர்களின் எண்ணிக்கையை குறைக்கும் நடவடிக்கையை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அந்நாட்டு முன்னணி ஊடகமொன்றுக்கு இந்த விடயம் தொடர்பில் தகவல் வெளியிட்டுள்ளது. எயார் கனடாவின் மொத்த ஊழியர்களில் சுமார் 1 வீதம் தொழிற்சங்கத்தில் இல்லாத முகாமைத்துவப் பணியாளர்கள் எனவும் அவர்களே இந்த மாற்றத்தால் பாதிக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



எயார் கனடா நிறுவனத்தின் பேச்சாளர் கிறிஸ்டோஃப் ஹென்னபெல் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

“சர்வதேச நிறுவனமாக இருக்கும் எயார் கனடா தன்னுடைய வளங்கள் மற்றும் செயல்முறைகளை அவ்வப்போது பரிசீலித்து, வணிக நடவடிக்கைகள் மற்றும் வாடிக்கையாளர் சேவைகளை திறம்பட ஆதரிக்கப்படுவதை உறுதி செய்கிறது,” என அவர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விரிவான ஆய்வுக்குப் பிறகு சில மேலாண்மை பணியிடங்களை குறைக்கும் கடினமான முடிவை எடுக்க வேண்டியதாகியுள்ளது,” என தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க ஜனாதிபதி டிரம்பை சந்திக்கவுள்ளார் மார்க் கார்னி

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் கனடிய பிரதமர் மார்க் கார்னி ஆகியோருக்கு இடையில் சந்திப்பு நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த வாரம் கொரியாவில் நடைபெறும் யீநுஊ உச்சி மாநாட்டில் மார்க் கார்னி மற்றும் டொனால்ட் ட்ரம்ப் சந்திக்கும் வாய்ப்பு இருப்பதாகவும், அதுவே இரு நாடுகளுக்கிடையேயான வர்த்தக பேச்சுவார்த்தைகளை மீண்டும் பாதையில் கொண்டு வர ஒரு வாய்ப்பாக இருக்கும் எனவும், கனடிய வணிக தலைவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

எபெக் மாநாட்டில் பிரதமரும் ஜனாதிபதியும் குறைந்தபட்சம் ஒருவருக்கொருவர் வணக்கம் சொல்லும் வாய்ப்பு



கிடைக்கும் என கனடிய வர்த்தக பேரவையின் தலைவர் கோல்டி ஹைடர் தெரிவித்துள்ளார்.

அதிலிருந்து மீண்டும் பேச்சுவார்த்தைகளை சாதகமான பாதைக்கு திருப்ப முடியுமென நம்புகிறோம் என மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், பிரதமர் கார்னி வெள்ளிக்கிழமை மலேசியாவின் கோலாலம்பூர் நோக்கி புறப்பட்டுள்ளார்.

அங்கு அவர் தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பு (ASEAN) உச்சி மாநாட்டில் பங்கேற்கிறார்.

ASEAN என்பது பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் தென்கிழக்காசிய நாடுகளின் பிராந்திய அமைப்பு ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் தீபாவளி சிறப்பு அஞ்சல் தலை வெளியீடு

தீபாவளி பண்டிகையையொட்டி, கனடா அஞ்சல் துறை சார்பில் சிறப்பு அஞ்சல் தலை வெளியிடப்பட்டுள்ளது.

கனடாவின் பன்முக கலாசார கட்டமைப்பைக் கொண்டாடும் நோக்கில், இந்த அஞ்சல் தலை வெளியிடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில், ஆங்கிலம் மற்றும் ஹிந்தியில் தீபாவளி என்ற வார்த்தையுடன் பாரம்பரிய ரங்கோலி படமும் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக கனடா அஞ்சல் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பில், கனடா




உள்பட உலகம் முழுவதும் ஹிந்துக்கள், சீக்கியர்கள், பௌத்த மதத்தினர், சமண மதத்தினரால் கொண்டாடப்படும் முக்கிய திருவிழா தீபாவளியாகும்.

கனடாவின் பன்முக கலாசாரக் கட்டமைப்பை அங்கீகரிக்கும் வகையில், தீபாவளி சிறப்பு அஞ்சல் தலை வெளியிடுவது பெருமைக்குரியது’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அஞ்சல் தலை வெளியீட்டுக்காக கனடா அஞ்சல் துறைக்கு இந்தியத் தூதரகம் நன்றி தெரிவித்துள்ளது.

**கனடாப் பொருள்கள் மீது...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் ஒன்றாறியோ அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட விளம்பரத்தையும் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

அந்த விளம்பரத்தில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ரொனால்ட் ரீகன், வரிகள் வர்த்தகப் போர்களையும் பொருளாதார பேரழிவையும் ஏற்படுத்தும் என குறிப்பிட்டிருந்தார்.

இதுவே, ட்ரம்பை கடும் கோபத்திற்கு தள்ளியது. ஆனால், கனடா தரப்பில், அமெரிக்கா பேச்சுவார்த்தைக்கு தயார் என்றால், கனடா உடன்படும் என பிரதமர் மார்க் கார்னி வெள்ளிக்கிழமை கூறியிருந்தார்.

ஏற்கனவே கனடா மீது 35 சதவீத வரி கடந்த ஓகஸ்ட் 1 ஆம் திகதி முதல் அமுலில் இருந்து வருகிறது. மட்டுமின்றி, எஃகு மற்றும் அலுமினியம் மீதான 25 வீத வரி, வாகனங்கள் மற்றும் அதன் உதிரி பாகங்கள் மீதான 25 வீத வரி போன்றவையும் அமுலில் இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.